## மனிதம் சுரக்கும் மக்களும் அறமற்ற சங்கிகளும்...

பெரும் அழிவைச் சந்தித்த, கேரளாவின் வயநாடு நிவாரண முகாம்களில் உள்ள, தாயை இழந்த குழந்தைகளுக்கு, பாலூட்ட, பராமரிக்க தனது மனைவி தயாராக இருப்பதாக இடுக்கியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் தெரிவித்திருந்தார். இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த அந்தத் தாய், தேவையான குழந்தைகளுக்குப் பாலூட்டியும் வருகிறார்.

கேரள சமூகம் கொண்டாடி வரும் அந்தத் தாயை, இழிவுபடுத்தும் வகையில் பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட நபர்கள் சிலர், சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர். அவர்களை அடையாளம் கண்டு அந்தப் பகுதி மக்கள் ‘தகுந்த பதில்’ அளித்துள்ளனர்.

சூரல்மலை கிராமத்தின் ஆற்றுக்கு குறுக்கே இருந்த பாலம் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், மறுகரையில் சிக்கிய மனிதர்களை மீட்கவும், மருத்துவ சிகிச்சை அளிக்கவும், குறுக்கே தற்காலிகமாக கயிறு மூலம் மீட்பு உதவிகள் கொண்டு செல்லப் பட்டன. அபாயகரமான அந்தச் சூழலில், அந்தக் கயிற்றின் மூலம் மறுகரைக்குச் சென்ற ஒரு பெண் மருத்துவரை, இப்போது கேரள மக்கள் கொண்டாடி வருகின்றனர். அவர் கயிற்றில் ஏறிச் செல்லும் வீடியோ, இப்போது கேரளம் முழுவதும் பரவி வருகிறது.

ஈடு இணையற்ற மனத்திடத்துடன், எவருக்கும் மருத்துவ சிகிச்சை தாமதமாகி விடக்கூடாது என்ற சிந்தனையுடன் செயல்பட்ட அந்தப் பெண் மருத்துவரும் ஓர் இஸ்லாமியர் என்பது குறிப்பிடத்தக்கது. காயமடைந்த பலருக்கும், மறுகரை சென்று முதலுதவிகளைச் செய்ததுடன், ஹெலிகாப்டர் மூலம், மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்க அமைக்கப்பட்ட மருத்துவக் குழுவுக்கும் அவர்தான் தலைமை ஏற்றுள்ளார்.

ஒரு பேரிடர் முனையில் மானுடத்தின் மீதுள்ள உறுதியான அக்கறையும், சமூக உணர்வையும் வெளிப்படுத்துபவர்களை சமூகம் கொண்டாடுகிறது. ஆனால், ஆன்மிகத்தில் அரசியல் பிழைப்பு நடத்தும் இழிவான பிறவிகளோ மனிதத் தன்மையையும் இழந்து நிற்கின்றனர். ‘நாம் எவரையாவது திட்ட வேண்டும் என்றால், தாராளமாக அவரை ‘சங்கி’ என்று அழைத்தாலே போதும்’ என கேரள மக்கள் இப்போது சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

## :ப்ளாஷ்பேக்





பொ.சக்திவேல்

### கலைஞர் ஆட்சியில் நலம்!

17.11.2008 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, இலங்கை தமிழர்கள் நிவாரண நிதி அளிக்குமாறு அறிக்கை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியில் மாவட்ட வருவாய் அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நான், தலைமைச் செயலகத்தில் கலைஞரைச் சந்தித்து பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன். காசோலையைப் பெற்றுக்கொண்ட கலைஞர், “அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டீர்கள். நலமா இருக்கீங்களா” என்று விசாரித்தார். “உங்கள் ஆட்சியில் நலமாக இருக்கிறேன், ஐயா” என்றேன். சிரித்தவாறே “நன்றி” என்றார். அப்போது அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– பொ.சக்திவேல்,**
**மாநகர இலக்கிய அணித் தலைவர், தூத்துக்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அனைவருக்குமான அரசு!

1971-ஆம் ஆண்டு, இரண்டாவது முறையாக, ஆட்சிப் பொறுப்பேற்றார் முத்தமிழறிஞர் கலைஞர். முதல்வர் பதவி யேற்றவுடன் மார்ச் 16-ஆம் தேதி வானொலியில் உரையாற்றினார். “ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு! அதுபோல அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு! அந்த நல்லரசாக இந்த அரசு தொடர்ந்து நடந்திட, நாளும் நாங்கள் பணியாற்றுவோம்” என அவர் ஆற்றிய உரை, காலம் கடந்தும் நிற்கிறது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 23

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

பிறப்பின் அடிப்படையில் மனிதர்களைப் பாகுபடுத்தும் வர்ணாசிரமத்தால் பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் கடந்த நூற்றாண்டில் இடஒதுக்கீடு உள்ளிட்ட சட்டவழிமுறைகளின் துணைகொண்டு கல்வியிலும், சமூகப் பொருளாதார நிலையிலும் மேம்பாடு அடைந்து வருகின்றனர். அதற்கு, முந்தைய காலகட்டத்திலும், கடந்த நூற்றாண்டிலும், வர்ணாசிரமக் கொடுமைகளிலிருந்து தப்பிக்க பல பெரியோர்கள் பக்தி, ஆன்மிகம் உள்ளிட்ட பண்பாட்டு வழிமுறைகளையும் கையாண்டு வந்துள்ளனர். அவர்களில் ரவிதாஸ், கபீர்தாஸ் ஆகியோர் முக்கியமானவர்கள்.

‘*சமர்*’ எனும் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவராகக் கருதப்படும் ரவிதாஸ் ஆன்மிக வழிகளைப் பின்பற்றி சாதி, பாலின அடிப்படை யிலான வேற்றுமைகளைக் களைய முனைந்தார். 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞரும் துறவியுமான கபீர்தாஸ் பிறப்பின் அடிப்படையிலான சாதிய சமூகத்தைக் கடுமையாக விமர்சித்தார். சாதி அடிப்படை யிலான தொழில்களை நிரா கரித்தார். அவர் ‘வேதங்கள்’, ‘சொர்க்கம்’, ‘மோட்சம் (முக்தி)’, ‘மறுபிறப்பு’ போன்ற வேதக் கருத்துக்களை விமர்சித்தார்.

**தாய்மதத்துக்குத் திரும்ப வைக்கும் சுத்தி இயக்கத்தை மோசடி என்றும், வர்ணாசிரம அமைப்பைக் காப்பாற்ற முயலும் தந்திரமான வித்தை என்றும் விமர்சித்தார்.**

சுவாமி அச்சூதானந்த்



இவர்களைப் போலவே, 1879-இல் ஒடுக்கப்பட்ட சமர் சாதியில் பிறந்த சுவாமி அச்சூ தானந்த் (ACHHUTANAND) 1900-30களில் ஆன்மிகத்தை முன்வைத்து ஒடுக்கப்பட் டோர் நலன் சார்ந்து இயங்கிய அன்றைய ஐக்கிய மாகாண தலைவர்களில் குறிப்பிடத் தக்கவர். தொடக்கத்தில், ஆரிய சமாஜத்தின் நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்ட அச்சூதானந்த், ஆரிய சமாஜத்தில் இணைந்து, அந்த அமைப்பின் பிரச்சாரங்களில் ஆர்வத்துடன் பங்கேற்றார். ‘ஹரிஹர்’ என்று தன்பெயரை மாற்றிக்கொண்டார்.

தாய் (இந்து) மதத்துக்குத் திரும்புதல் என்ற பெயரில் ‘சுத்தி இயக்கம்’, ஆரிய சமாஜ நிறு வனர் தயானந்த சரஸ்வதியால் முன்னெடுக்கப் பட்டது. ஒடுக்கப்பட்ட சாதியினர் இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கு மாறுவதைத் தடுத்தல், மதம் மாறியவர்களை மீண்டும் இந்து மதத்துக்குத் திரும்புவதை ஊக்கவிக்கும், **‘சுத்தி இயக்கப் பிரச்சாரம்’** ஆகியவற்றில் சுவாமி அச்சூதானந்த் முனைப்புடன் பணியாற்றினார்.

1911-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு முந்தைய ஆண்டுகளில் தீண்டத்தகாத சமர்களை இந்து மதத்தின் கீழ் பதிவு செய்யும் நோக்கில், ஆரிய சமாஜம் பிரச்சாரம் செய்தது. ஆரிய சமாஜத்தின் சீர்திருத்தவாதிகள் அன்றைய ஆங்கிலேய அரசு பின்பற்றிய மக்கள் தொகைக் கணக்கெடுப் பில், இந்துக்களின் மக்கள் தொகை குறைந்து வருவதைப் பற்றி மட்டுமே கவலைப் படுகிறார்கள் என்று, சுவாமி அச்சூதானந்த் உணர்ந்தார். இந்து சமூகத்தைச் சீர்திருத்தி உண்மையான சமத்துவத்தை ஏற்படுத்தும், எந்த நோக்கமும் அவர்களுக்கு இல்லை என்று புரிந்துகொண்ட அவர், ஆரிய சமாஜத்தின் நடவடிக்கை களினால் வெறுப்படைந்து, ஆரிய சமாஜத்தை கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார்.

## யார் மண்ணின் மைந்தர்கள்?

ஆரிய சமாஜத்தின் மீதுகொண்ட பற்றினால் ஏற்றுக்கொண்ட ஹரிஹர் என்ற பெயரைக் கைவிட்டு, அச்சூதானந்த் என்ற புதிய பெயரைச் சூட்டிக்கொண்டார். அச்சூத் (ACHHUT) என்றால் ‘தீண்டத்தகாதவர்’ என்று பொருள்.

பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் பிராமண மதத்தின் கொடுமை களிலிருந்து தப்பித்து கிறிஸ்துவ, இஸ்லாம் மதங்களுக்கு ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் மாறுவதைத் தடுப்பதற்காகவே ஆரிய சமாஜம் நிறுவப்பட்டுள்ளது என்று ஆரிய சமாஜத்தின் தீய நோக்கத்தை அம்பலப்படுத்தினார். தாய்மதத்துக்குத் திரும்ப வைக்கும் சுத்தி இயக்கத்தை மோசடி என்றும், வர்ணாசிரம அமைப்பைக் காப்பாற்ற முயலும் தந்திரமான வித்தை என்றும் விமர்சித்தார். தீண்டத்தகாத மக்களே இந்தியாவின் மூத்த குடிமக்கள் என்றும், உண்மையான உரிமையாளர்கள் என்றும், ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தனர் என்றும் முழங்கினார். அதோடு அவர் நிற்கவில்லை.

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 23

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

சேலத்தில் 1944-இல் நீதிக்கட்சி, திராவிடர் கழகமாகப் பரிணமித்த வரலாற்றை **‘கலகத்தில் பூத்த கழகம்’** என முன்பு பதிவு செய்தோம். அதுபோல, புதுச்சேரியில் திராவிடர் கழகம் உருவானதோ கலவரத்துக்கு மத்தியில்தான்.

1945-ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று புதுச்சேரி ஒதியஞ்சாலையில் இருந்த கவாலியன் திரையரங்கில், திராவிடர் கழகத் தொடக்க விழா மாநாடு நடைபெற்றது. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மாளிகையில் இருந்து, காலை 9.30 மணிக்குப் பேரணி தொடங்கியது. தந்தை பெரியார், திருவொற்றியூர் சண்முகம், பேரறிஞர் அண்ணா உள்ளிட்டோருடன் பல முன்னணித் தலைவர்கள், தொண்டர்கள் என சுமார் மூவாயிரம் பேர் புடைசூழ பிரமாண்ட பேரணி நடைபெற்றது. மாநாட்டுத் திடலை பேரணி அடையும் முன்பே, சுமார் ஐந்தாயிரம் பேர் அரங்கை நிரப்பியிருந்தனர்.

திராவிட நாட்டை வலியுறுத்தும் பாடல் களுடன் மாநாடு தொடங்கிட, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். “திராவிடத் தலைவர்களே திரும்பிச் செல் லுங்கள்” என்று சிலர் கூச்சலிட, “வா என்று அழைப்பதுதான் தமிழர் பண்பு, போ என்று கூறக் காரணம் யாதோ?” என்று உரையாற்றி முடித்துவிட்டு, கழகக் கொடியை ஏற்றினார் அண்ணா. ‘திராவிடர்’ என்றால் என்ன என்பதை விளக்கி, மாநாட்டைத் தொடங்கி வைத்தார் திருவொற்றியூர் சண்முகம்.






## மானமிகு சுயமரியாதைக்காரர் உருவானார்!

பெரியாரின் தலைமை யுரைக்குப் பிறகு நாவலர் நெடுஞ்செழியன், திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைத்தார்.

பயணக் களைப்பால் பெரியார் ஓய்வுக்குச் செல்ல, மாலையில் மீண்டும் ‘அஞ்சா நெஞ்சன்’ அழகிரி தலைமையில் மாநாடு கூடியது. தெக்கோல், சர் ஏ.டி.பன்னீர்செல்வம், ‘புரட்சிக் கவி’ பாரதிதாசன் ஆகியோர் படங்கள் திறக்கப்பட்டன. புரட்சியாளர் அம்பேத்கர் படத்தை அன்னை சத்தியவாணி முத்து திறந்து வைத்தார். கூட்டத்தில் இருந்த எதிரிகள் சிலர் பாரதி தாசனுக்கு எதிராகக் கூச்சலிட்டனர். கொடிமரத்தை வீழ்த்தினர். இதைக் காரணம் காட்டி, நிகழ்ச்சியை ரத்து செய்யும்படி வற்புறுத்தியது காவல்துறை. தலைவர்கள் உரையின்றி பாதியிலேயே கைவிடப்பட்டது மாநாடு.

இதற்கிடையே கலைஞர், பாரதிதாசன், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் தலைவர்களைப் பாது காப்பாக அனுப்பிவைத்து விட்டு, சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தனர். கலவரக்காரர்கள் சூழ்ந்துவிட, மூவரும் ஆளுக்கொரு பக்க மாய் ஓட்டம் பிடித்தனர். ஓடிக்கொண்டிருக்கும் போதே கலைஞரின் சட்டை யில் பொருத்தப்பட்டிருந்த பெரியார் பேட்ஜை ஒருவர் பிடுங்க, இறுகப் பற்றியவாறே ஓடினார் கலைஞர். இறுதியில் கலவரத்திற்குத் திட்டமிடப்பட்ட வீட்டிலேயே அடைக்கலம் புகுந்து சிக்கிக்கொண்டார் கலைஞர். அவரை தெருவுக்கு இழுத்துவந்து அடித்து, துவைத்து மயக்கமுற்ற நிலையில் வீதியில் வீசிச் சென்றனர். அந்த நிலையில் ஓர் இசுலாமியக் குடும்பத்தினர், தூக்கிச்சென்று முதலுதவி அளித்துக் காப்பாற்றி, இரவில் அடைக்கலம் அளித்தனர்.

கலைஞரைக் காணாமல் பெரியாரும், அண்ணாவும் துடிதுடித்துப் போயிருந்தனர். இருவரும் தங்கியிருந்த இடத்திற்கு அதிகாலையில் இசுலாமியர் வேடத்தில் வந்துசேர்ந்தார் கலைஞர். ஆரத்தழுவிய பெரியார் “சுகமாக இருக்கிறாயா?” என தழுதழுத்தக் குரலில் கேட்டார். காயங்களுக்குத் தன் கையாலேயே மருந்திட்டு ஆற்றுப்படுத்தினார் பெரியார். “என்னுடன் வா போகலாம்” என்றும் ஆணை யிட்டார். ஈரோடு புறப்பட்டார்.... ‘குடிஅரசு’ இதழில் துணை ஆசிரியர் ஆனார்... மானமிகு சுயமரியாதைக்காரனாக பெரியாரின் மாணவ ரானார்.

**“சுகமாக இருக்கிறாயா?” என தழுதழுத்தக் குரலில் கேட்டார். காயங்களுக்குத் தன் கையாலேயே மருந்திட்டு ஆற்றுப்படுத்தினார் பெரியார்.**

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

562




எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131